# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
************

முறையீட்டு மனு எண்: 0634/2016/ந

ஆணை எண்: 87/2017

நாள்: 3/5/2017

திரு. S. துளசிதரன்,
சுப்பிரமணிய நகர் (பொதுமக்கள் சார்பாக)
ஜமீன் பல்லாவரம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
பல்லவபுரம் நகராட்சி. – எதிர் மனுதாரர்

## ஆணை:

முறையீட்டு மனுதாரரது 01.07.2016 நாளிட்ட முறையீட்டு மனு 04.07.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்.0634/16 ஆக பதிவு செய்யப்பட்டது.

மேற்படி முறையீட்டு மனுவில் ஜமீன் பல்லாவரம், சுப்பிரமணிய நகர் பகுதியில் சரியான சாலை வசதி, குடி தண்ணீர் வசதி இல்லை எனவும் பிரதான சாலையின் குறுக்கே சில ஆக்கிரமிப்புகள் உள்ளதாகவும் அங்குள்ள ஏரியில் கழிவு நீர் கலந்து மாசுபடுவதாகவும், குறைகளை நிவர்த்தி செய்திட பல்லவபுரம் நகராட்சியில் பலமுறை புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி முறையீட்டு மனுவுடன் சில புகைப்படங்களும், பத்திரிக்கைச் செய்தி துணிக்கிரி நகலும் ஆதாரமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இம்முறையீட்டு மனு தொடர்பான அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு தெரிவித்து பல்லவபுரம் நகராட்சி ஆணையருக்கு அறிவிப்பாணை (ஆ.ம.எண்.0634/2016/ந நாள்:05.07.2016) அனுப்பப்பட்டது.

பல்லவபுரம் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.3650/2016/இ1, நாள்:22.07.2016, 26.07.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்றது. மேற்படி அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன:-

(1) மூவரசம்பட்டு ஏரி பொதுப் பணி துறை கட்டுப்பாட்டில் உள்ளதால், ஏரியினை நகராட்சியால் பராமரித்திட இயலாது. பல்லவபுரம் நகராட்சி எல்லையில் மூவரசம்பட்டு கிராமத்தில் மூவரசம்பட்டு ஏரி உள்ளது. இந்த ஏரியினை ஒட்டி பிளாக் எண்.58, T.S.No.6/1, 6/2, 6/3, 6/4, ஏரி உள்வாய் உள்ளது. இந்த இடம் பொதுப் பணித் துறைக்கு சொந்தமானது. அப்பகுதி பொதுமக்களின் நலன் கருதி தற்காலிக சாலை கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேலும் இச்சாலையை இனி வரும் காலங்களில் இந்நகராட்சி மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தடையில்லா சான்று வழங்குமாறு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.2026/2013/இ1 நாள்:10/02/2016ல் செயற்பொறியாளர் பொதுப் பணித்துறை, காஞ்சிபுரம் அவர்களுக்கு அனுப்பப்பட்டு உள்ளது.

(2) சுப்பிரமணிய நகர் பகுதி, பல்லவபுரம் நகராட்சி பகுதியிலுள்ள அனுமதியற்ற மனைப் பிரிவாகும். மேலும் சாலையின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள வேலி தனியாருக்கு சொந்தமானது. அனுமதியற்ற மனை பிரிவானதால் நகராட்சியால் சாலை அமைக்க இயலாது.

(3) திரிசூலம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியான உழைப்பாளி நகர், அம்மன் நகர், கென்னடி வேலி வழியாக மழைநீர் கால்வாய் மூலமாக கழிவு நீர் கலந்து மூவரசம்பட்டு ஏரியில் கலந்து குடிநீர் மாசபடுவதால், கழிவுநீர் கலக்காமல் உரிய நடவடிக்கை எடுக்குமாறு திரிசூலம் ஊராட்சி அலுவலகத்திற்கும் மற்றும் செயற்பொறியாளர் நீர்வள ஆதாரத்துறை, காஞ்சிபுரம் மாவட்டம், உதவி செயற் பொறியாளர் நீர்வள ஆதாரத்துறை செங்கற்பட்டு உதவி பொறியாளர் நீர்வள ஆதாரத்துறை, படப்பை ஆகியோர்களுக்கு ந.க.எண்.1800/2016/இ3 நாள்: 13.06.2016ல் கடிதம் அனுப்பப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.

(4) புகாரில் குறிப்பிடப்பட்ட மனைப்பிரிவு அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவாகும், இம்மனைப் பிரிவு 1997-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு, சாலைகள் எதுவும் நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட-வில்லை. மேலும், சுப்பிரமணிய நகரின் பிரதான சாலையின் உள்ளே அமைக்கப்பட்ட வேலி தனியாருக்கு சொந்தமான பட்டா இடமாகும்."

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரர் மற்றும் நகராட்சி ஆணையர் ஆகியோர் 23.08.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தெரிவித்து தனித்தனியே அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. மேலும், மேற்படி விசாரணையில் கலந்து கொள்ளுமாறு புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கும் அழைப்பாணை அனுப்பப்பட்டது.

23.08.2016 அன்று ஆஜரான பல்லவபுரம் நகராட்சி ஆணையர் புகாரில் குறிப்பிட்டுள்ள பகுதிக்கு ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சாலை வசதி செய்திட பரிசீலனையில் உள்ளதெனவும் தனி நபர் ஒருவர் தனது பட்டா நிலத்தில் வேலி அமைத்ததால் சாலை பணியை செய்ய முடியவில்லை எனவும் தற்போது மனுதாரர் மற்றும் பொது மக்கள் நடவடிக்கையின் மூலம் அந்தப் பகுதியிலிருந்த வேலியை அகற்றி விட்டனரெனவும் பொது மக்கள் ஒத்துழைப்போடு உரிய வசதிகள் செய்து கொடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

விசாரணைக்கு ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவிலுள்ள கோரிக்கைகளை மீள வலியுறுத்தி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்தார். இதினிடையே திரிசூலம் ஊராட்சியின் முன்னாள் தலைவியிடமிருந்து வரப்பெற்ற 22.08.2016 நாளிட்ட கடிதத்தில் மூவரசம்பட்டு ஊராட்சிக்குட்பட்ட பொதுப் பணித் துறைக்கு சொந்தமான ஏரியில் பல்லாவரம் நகராட்சி வார்டு எண்.13-ல் அமைந்துள்ள கிருஷ்ணாநகர் மற்றும் ஜெயலஷ்மி நகர் பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் மூலம் கழிவு நீர் ஏரியில் விடப்படுவதாக பொதுப் பணித்துறை உதவி பொறியாளர், படப்பை, உதவி செயற் பொறியாளர் செங்கல்பட்டு அவர்களது கடிதம் மூலமாக தெரிய வருவதாகவும் திரிசூலம் ஊராட்சியில் உள்ள குடியிருப்புகளில் இருந்து கழிவுநீர் எதுவும் மூவரசம்பட்டு ஏரியில் கலப்பதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தில் குறிப்பிட்டுள்ள பொறியாளர்களின் கடித நகல்களை பெற்று அனுப்பிடுமாறு புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும், 03.11.2016 அன்று நேரில் ஆஜராகி உரிய விளக்கங்களையும் மேற்படி கடித நகல்களையும் சமர்ப்பித்திடுமாறு ஆணையிடப்பட்டது.

அதன்படி 03.11.2016 அன்று நேரில் ஆஜராகி தேர்தல் பணியில் இருந்ததால் மேற்குறிப்பிட்ட பொருள் குறித்து ஸ்தல ஆய்வு செய்யப்படவில்லை எனவும் விரைவில் ஸ்தல ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதாக ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் உறுதி அளிக்கப்பட்டது. அதன் பின்னர் 25.11.2016 அன்று அறிக்கை (ந.க.எண்.4130/2015/ஆ1 நாள்:10.11.2016) வரப்பெற்றது. மேற்படி அறிக்கையில் கேள்வியிலுள்ள இடத்தினை 04.11.2016 அன்று நேரடி ஆய்வு செய்ததாகவும் பல்லவபுரம் நகராட்சி பகுதிகளான கிருஷ்ணாநகர் மற்றும் ஜெயலஷ்மி நகர் ஆகிய பகுதிகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் அப்பகுதிகளில் உள்ள கழிவு நீர்க்கால்வாய் வழியே சென்று மூவரசம்பட்டு ஏரியில் கலப்பது தெரியவந்ததாகவும் மேலும் திரிசூலம் ஊராட்சியிலிருந்து கழிவுநீர் நகராட்சி பகுதிக்குள் செல்லாதவாறு மூவரசம்பட்டு மெயின் சாலையில் உள்ள கல்வெட்டில் மண் கொட்டி அடைக்கப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரிசூலம் ஊராட்சி பகுதியிலிருந்து மூவரசம்பட்டு ஏரியில் கழிவுநீர் எதுவும் கலப்பதில்லை எனவும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நகராட்சிப் பகுதியிலிருந்து ஏரியின் கழிவு நீர் கலக்காமலிருக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்திடுமாறு பல்லவபுரம் நகராட்சி

ஆணையருக்கு அறிவிப்பாணை அ.மு.எண்.0634/16/ந-1 நாள்:03.12.2016ன் மூலம் ஆணையிடப்பட்டது.

பல்லவபுரம் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.3650/2016/இ1, நாள்: 19.01.2017ல் கீழ்க்கண்டவாறான விளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டன:-

"வார்டு எண்.13, கிருஷ்ணா நகர், ஜெயலட்சுமி நகர் பகுதிகள் பல்லவபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியாகும். இப்பகுதிகள் திரிசூலம் ஊராட்சி எல்லைக்குட்பட்ட மூவரம்பட்டு ஊராட்சி அருகாமையில் உள்ள பகுதியாகும். திரிசூலம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியான உழைப்பாளி நகர், அம்மன் நகர், கென்னடி வேலி வழியாக மழைநீர் கால்வாய் மூலமாக கழிவுநீர் கலந்து மூவரசம்பட்டு ஏரியில் கலந்து குடிநீர் மாசுபடுகிறதென ஜமீன் பல்லாவரம் கிருஷ்ணாநகர் குடியிருப்போர் நலச்சங்கம், ஜெயலட்சுமி நகர் நலவாழ்வு சங்கம் ஆகிய சங்கங்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் திரிசூலம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியிலிருந்து கழிவு நீர் கலக்காமலிருக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துள்ளார்கள்.

மூவரசம்பட்டு ஏரியில் கழிவு நீர் கலப்பது தொடர்பாக நகராட்சி அலுவலர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் இணைந்து 06.01.2017 அன்று ஸ்தல ஆய்வு மேற்கொண்டிட ஏதுவாக வட்டார வளர்ச்சி அலுவலருக்கு 30.12.2016 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது. ஆனால், ஊராட்சி ஒன்றிய பணியாளர்கள் யாரும் ஆய்விற்கு முன்வரவில்லை. இந்நிலையில் மேற்படி பகுதியில் மீண்டும் நகராட்சி மூலம் ஆய்வு செய்யப்பட்டது. திரிசூலம் ஊராட்சி பகுதியான உழைப்பாளி நகர், அம்மன் நகர் மற்றும் கென்னடி வேலி வழியாக கழிவுநீர் உருவாகி பல்லவபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான ஜெயலட்சுமி நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்வாயில் கலந்து மூவரசம்பட்டு ஏரியில் கலந்து விடுகிறது. திரிசூலம் பகுதிகள் அனைத்தும் மேட்டுப் பகுதி என்பதால் தாழ்வான பகுதியான ஜெயலட்சுமி நகர் பகுதி மழைநீர் கால்வாயில் கலந்து விடுகிறது. நகராட்சி பகுதியிலிருந்து எவ்வித கழிவுநீரும் மூவரசம்பட்டு ஏரியில் கலக்கப்படவில்லை."

மேற்படி அறிக்கையுடன் உரிய புகைப்பட ஆதாரங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் இப்பொருள் குறித்து ஊராட்சி பகுதியிலிருந்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளதால் பொதுநலன் கருதி உரிய நடவடிக்கைகளை துரிதமாக எடுக்குமாறு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சி தலைவர், உதவி இயக்குநர் (ஊ) மற்றும் ஊராட்சி ஒன்றிய ஆணையர், புனித தோமையார் மலை ஆகியோரை வலியுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு, மே திங்கள் 5ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/
செயலாளர்

பெறுநர்

1. திரு. S. துளசிதரன்,
   எண்,35A, சுப்பிரமணிய நகர்,
   பழய பல்லாவரம்,
   சென்னை–600 117.

2. நகராட்சி ஆணையர்,
   பல்லவபுரம் நகராட்சி,
   குரோம்பேட்டை, சென்னை – 600 044.

3. ஊராட்சி ஒன்றிய ஆணையர்,
   புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம்,
   சிட்லபாக்கம், சென்னை.

4. உதவி இயக்குநர் (ஊ)
   மா.ஆ.க. அலுவலகம்,
   காந்திபுரம் மாவட்டம்,
   காந்திபுரம்.

5. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   காஞ்சிபுரம் மாவட்டம்,
   காஞ்சிபுரம்.